**வகுப்பு - 10**

**இயல் - 2**

**கவிதைப்பேழை**

## முல்லைப்பாட்டு

**குறுவினா**

**1. முல்லைப்பாட்டு நூல் குறிப்பு எழுதுக?**

முல்லைப்பாட்டு பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இந்நூல் 103 அடிகளைக் கொண்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது. இந்நூலை எழுதியவர் நப்பூதனார்.

**2. தலைவியை முதுபெண்டிர் எவ்வாறு ஆற்றுப்படுத்தினார்.**

உன் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவது உறுதி, மனத்தடுமாற்றம் கொள்ளாதே என முதுபெண்டிர் தலைவியை ஆற்றுப்படுத்தினர்.

**3. மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.**

பொருள் – திருமால்

இலக்கணக்குறிப்பு வரைக - செய்யுளிசை அளபெடை.

**சிறுவினா**

**1. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

(குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் ‘சளப் தளப்‘ என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக்கப்பல்

- மழை நீரில் குளித்துவிட்டுத் தென்னந்தோப்பில் தலை உலர்த்த வரும் தென்றல் காற்று.
- அணில்களின் சடுகுடு விளையாட்டால் மரங்களின் இலைகளில்சொட்டும் நீர், ஆர்மோனியம் இல்லாமலேயேசுருதியோடு பாடும் குயில் மழலை மாறாத நதியோசை தாழ்வாரங்களில் சொட்டும் நீர் போடும் தாளம்.

- உடலில் உரசும் மெல்லிய குளிர் காற்று தெருக்களில் தேங்கியகுட்டைகளில் சளப்தளப் என குதித்து விளையாடும் குழந்தைகள்,
- வண்டு இசைக்கும் சத்தத்துடன் காகித கப்பல் விட்டு மகிழும் சிறுவர்களின் கூச்சல் என இயற்கை. பூமி என்னும் பேரேட்டை எழுதியுள்ளது.

***2. விரிச்சி குறிப்பு எழுதுக.***

ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள் மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் செல்லைக் கூர்ந்து கேட்பர். அவர்கள் நல்ல சொல்லைக்கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர் இதையே விரிச்சி என்பர்.

***3. முல்லைப்பாட்டில் கார்கால காட்சியை விளக்குக***

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பெய்கிறது. திருமால் குறுகிய வடிவம் கொண்டு மாவலி மன்னன் முன் மண்ணுக்கும் விண்ணுக்கும் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போல் உள்ளது. மழை மேகம் அம்மேகம் பெருந்தோற்றம் கொண்டு பெருமழையாய்ப் பொழிகிறது.

அம்மாலைப்பொழுதில் முதிய பெண்கள் கவலையுடன் ஊர்ப்பக்கம் சென்றனர், மலர்ந்த முல்லைப்பூக்களோடு நாழியில் கொண்டுவந்த நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர். தெய்வத்தை தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

அங்கு சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது அதன் வருத்தத்தை கண்ட ஒரு இளம் பெண் புல்லை மேய்ந்து உன் தாய்மார் எம் இடையர் ஒட்டி வர இப்பொழுது வந்து விடுவார். வருந்தாதே! என்றாள்.

இது நல்ல சொல் எனக் கொண்டு முது பெண்கள் தலைவியிடம் வருந்தாதே நாங்கள் நற்சொல் கேட்டோம். நின் தலைவன் திரைப்பொருளோடு வருவது உறுதி என்று தலைவியை ஆற்றுப்படுத்தினார்.

நெடுவினா

*1. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.*

**மழைப்பொழியும் காட்சி:**

வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், குறுகிய வடிவம் கொண்டு வந்த மாவலி மன்னனுக்கு நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம் . அம்மேகம் ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து விரைந்து வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

**முதிய பெண்கள் நற்சொல் கேட்டு நின்ற காட்சி :**

முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர் யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்: அந்த மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டு வந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர். பிறகு தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**முதுபெண்டிர் விரிச்சி நின்ற காட்சி:**

சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது அதன் வருத்தத்தை ஒர் இடைமகள் கண்டாள். குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி நின்ற அவள். புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஒட்டிவர இப்போது வந்துவிடுவர். வருந்தாதே என்றாள். இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம் என்று கூறினர். இவ்வாறு தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நின்றனர்.

Next Generation School